## பிரதம மாவட்ட நீதிமன்றம், திருவள்ளூர்.

இந்நீதிமன்ற உதவியாளர் திரு. மோகன் அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு இந்திய சாட்சிய சட்டம் 1871, பிரிவு 1-ன் கீழ் மனுதாரர்/ எதிர்மனுதாரர் தரப்பு 1வது சாட்சியாக விசாரிக்கப்பட்டு 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 18ஆம் நாள் பதிவு செய்யப்பட்டது.

பெயர்.................................................. மாவட்டம்........................................................

கிராமம்........................................................... தந்தை /கணவர் பெயர்...........................................

தாலுக்கா........................................................... தொழில்.................................................................

-----------------------------------------------------------------------------------------------------------

**LAOP No. 156/2026, LAOP No.155/2026, LAOP No.154/2026,
LAOP No.153/2026, LAOP No.151/2026, LAOP No.150/2026,
LAOP No.149/2026, LAOP No.148/2026**

# 18.03.2026

**ம.த.சா.1 - திருமதி. உஷா க/பெ. சுப்பிரமணி**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் திருத்தணி, ஜோதி நகரில் வசித்து வருகிறேன். நான் இந்த மனுவின் மனுதாரர். நான் LAOP No.155/2026, LAOP No.154/2026, LAOP No.153/2026, LAOP No.151/2026, LAOP No.150/2026, LAOP No.149/2026, LAOP No.148/2026 வழக்கு மனுதாரர்களுக்கும் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேன். நான் மனுதாரர் தரப்பு சாட்சி 1. என் தரப்பு சாட்சியத்தை நான் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்றாக தெரியும். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதனை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். என் தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை நான் தாக்கல் செய்கிறேன்.

1. கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட அரசு வழிகாட்டி மதிப்பு @ Rs.1250/- Per Sq.feet (01.04.2012 முதல் 08.06.2017 வரை) **ம.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. எனது ஆதார் அடையாள அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) **ம.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.**

**1 மற்றும் 2 எதிர்மனுதார்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

மற்ற மனுதாரர்கள் சார்பாக சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு பொது அதிகார பத்திரம் அளிக்கவில்லை என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் திருத்திணி சென்னை இணைப்பு சாலை திருத்தணி போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்கள் வணிக நோக்கத்திற்காக கையகப்படுத்தப்படவில்லை என்றால் சரிதான். நிலத்தில் பயிர் செய்ததற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு அருகாமையில் அங்கீகரிக்கப்பட்ட வீட்டுமனைக்கான லேஅவுட் இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சதுரடி ரூபாய் 7 ஆயிரம் விலைபோகும் என்பதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களுக்கு புதிய நில எடுப்பு சட்டத்தின்படி சரியான இழப்பீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றாலும் அதிகப்படியான இழப்பீடு எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.